# தோழர் கான்சலோவ் உயிரைப் பாதுகாப்போம்!
# அமெரிக்க ஏகாதிபத்தியச் சதியை முறியடிப்போம்!

பெரு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் தோழர் கான்சலோவ் செப்டம்பர் 12-ல் கைது செய்யப்பட்டு அக்டோபர் 7-ல் ராணுவ விசாரணைக் குழுவால் தூக்குத்தண்டனை வழங்கப்பட்டுள்ளார். பெரு நாட்டு அரசியல் சட்டம் தூக்குத் தண்டனையை அனுமதியளிக்கவில்லை எனினும் பெரு நாட்டை ஆளும் அமெரிக்கக் கைக்கூலி பூஜிமோரி அரசாங்கம் சட்டவிரோதமாக, அமெரிக்கத் தூண்டுதலால் இத்தண்டனையை வழங்கியிருக்கிறது.

பெருநாட்டை ஆளும் பூஜிமோரியும் அவனைச் சேர்ந்தவர்களும் சர்வதேச போதைமருந்து கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர்கள். அவனுடைய சகாக்கள் பலர் இக்குற்றத்திற்காக விசாரணையில் இருக்கும் சமூக விரோதிகள். அய்.எம்.எப். உலக வங்கியில் பல ஆயிரம் கோடி டாலர் கடன் வாங்கியதன் மூலம் நாட்டை ஏகாதிபத்தியத்திற்கு அடகுவைத்த தேச துரோகிகள். இன்று பெருநாட்டின் பொருளாதாரம் அய்.எம்.எப். உத்தரவுப்படியும், இராணுவம் அமெரிக்க இராணுவத் தலைமையின் உத்தரவுப் படியும், செயல்பட்டு வருவதற்குக் காரணமான ஏகாதிபத்தியக் கைக் கூலிகள். நாட்டை அன்னியருக்கு அடகு வைக்கும் இக்கும்பலின் கொள்கையால் கோடிக்கணக்கான மக்கள் கொடிய வறுமைக்குத் தள்ளப் படுவதற்கும், காலரா போன்ற கொடிய நோய்களால் நாள்தோறும் பல்லாயிரம் மக்கள் மடிந்து வருவதற்கும் காரணமான கொடிய மக்கள் விரோதிகள். இவர்களுடைய மக்கள் விரோத, தேச விரோத கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் எதிர்த்துப் போராடி வரும் மக்களை ராணுவத்தை ஏவி நாள்தோறும் ஆயிரக் கணக்கில் கொன்று குவித்து வரும் அரச பயங்கரவாதிகள் இவர்களுக்கு எல்லா வகையிலும் பாதுகாப்பாகவும், துணையாகவும் இருந்து வருவது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

இந்தக் கொடிய கும்பலின் மக்கள் விரோத, ஜனநாயக விரோத, தேசவிரோத ஆட்சிக்கெதிராக பல ஆண்டுகளாக மக்களைத் திரட்டி புரட்சிகர மக்கள் யுத்தத்தை நடத்திவருவது தீரமிக்க பெரு கம்யூனிஸ்ட் கட்சி. பெருநாட்டு மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்ந்து வரும் பெரு கம்யூனிஸ்ட் கட்சியின் ஒப்பற்ற தலைவர்தான் தோழர் கான்சலோவ்.

இந்த உண்மைகளை மறைக்கவும், தோழர் கான்சலோவையும், பெரு கம்யூனிஸ்ட் கட்சியையும் ஒழித்துக் கட்டவும், கான்சலோவ் 24000 பேரைக் கொன்ற கொலைகாரன் என்றும், பயங்கரவாதி என்றும், போதைமருந்து கடத்தல்காரன் என்றும், தேசவிரோதி என்றும், பூஜிமோரி கும்பல் குற்றம் சாட்டி மரணதண்டனை வழங்கி இருக்கிறது. இதை உலகம் முழுவதும் எல்லா ஏகாதிபத்தியவாதிகளும், அவற்றின் கைக்கூலிகளும் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். உலகம் முழுவதும் உள்ள புரட்சியாளர்களையும், புரட்சிகர இயக்கங்களையும் இழிவுபடுத்துவது அதன் மூலம் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தி ஒழித்துக் கட்டுவது என்ற அவர்களுடைய தந்திரத்தின் ஒரு பகுதியாக இதை மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்திய ஆளும் வர்க்கங்களும் வானொலி, தொலைக் காட்சி, செய்தித் தாள்கள் மூலம் ஏகாதிபத்தியவாதிகளின் இந்த அவதூறுப் பொய்ப் பிரச்சாரங்களை அப்படியே வாந்தி எடுத்து வருகின்றன. இந்திய ஆளும் வர்க்கம் தோழர் கான்சலோவ் பற்றியும், பெரு கம்யூனிஸ்ட் கட்சி பற்றியும் வேறு மாதிரி பிரச்சாரம் செய்யும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. அவசர நிலைக்கால பாசிச அரக்கியை அன்னை இந்திரா என்றும், போபர்ஸ் திருடன் ராஜீவ் காந்தியை உத்தமன் என்றும், ரூ. 8000 கோடி பங்குப்பத்திர ஊழல் கும்பலின் தலைவர்களை — நாட்டைப் பகிரங்கமாக அன்னிய ஏகாதிபத்தியத்திற்கு அடகு வைக்கும் நரசிம்மராவ்-மன்மோகன்சிங் கும்பலைத் தேசியத் தலைவர்கள் என்றும், ஆட்சிக்கு வந்த ஓராண்டிலேயே ரூ. 100 கோடிக்கு மேல் கொள்ளையடித்த ஜெயலலிதாவை தேசிய ஒருமைப்பாட்டு நாயகி என்றும் புகழ்பாடி தேசிய (இன) விடுதலை இயக்கங்களையும் புரட்சியாளர்களையும் பயங்கரவாதிகள், தேசவிரோதிகள் என்றும்; கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள் என்றும் வசைபாடி அடக்கி ஒடுக்கும் இந்திய ஆளும் வர்க்கங்களும் அவற்றின் ஊதுகுழல்களான தொலைக்காட்சி, வானொலி, செய்தித் தாள்களும் தோழர் கான்சலோவ் பற்றி ஏகாதிபத்தியவாதிகள் பரப்பும் அவதூறுகளை வாந்தி எடுப்பதில் வியப்பதற்கு ஒன்றும் இல்லை.

ஆனால் தோழர் கான்சலோவுக்கும் பெரு கம்யூனிஸ்ட் கட்சிக்கும் எதிராக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும், அமெரிக்கக் கைக்கூலி அரசுகளும் கட்டவிழ்த்து விட்டுள்ள பொய்ப்பிரச்சாரங்களையும், சதிகளையும் எதிர்த்து இன்று உலகம் முழுவதும் அனைத்து சனநாயக சக்திகளும், புரட்சியாளர்களும், மனித உரிமை அமைப்புகளும் அணிதிரண்டு வருகின்றனர். அவர்களுடன் தமிழகப் பாட்டாளி வர்க்கமும் கைகோத்து நிற்கிறது. ஏகாதிபத்தியவாதிகளின்-சதிகாரர்களின் வெற்றி தற்காலிகமானதே! இறுதி வெற்றி புரட்சியாளர்களுக்கும்-மக்களுக்குமே என்பதை வரலாறு நிரூபித்திருக்கிறது! இனியும் நிரூபிக்கும்!

அன்பார்ந்த தமிழக உழைக்கும் மக்களே,

★ **தோழர் கான்சலோவ் உயிரைப் பாதுகாக்க குரல் கொடுப்போம்!**

★ **அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் கைக்கூலிகளும் புரட்சியாளர்களை இழிவுபடுத்துவதை முறியடிப்போம்!**

**அமெரிக்க ஏகாதிபத்தியக் கைக்கூலி பெருநாட்டு அரசே!**

★ **தோழர் கான்சலோவை விடுதலை செய்!**
**தூக்குத் தண்டனையை ரத்து செய்!**

இவண்

**தமிழ்நாடு அமைப்புக் கமிட்டி**
**இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மா-லெ)**

12-10-92

---

குறிப்பு : 23-10-92 அன்று மாலை 3-30 மணிக்கு வள்ளுவர்கோட்டத்திலிருந்து அனைத்து புரட்சிகர, சனநாயக சக்திகளும் கலந்து கொள்ளும் கண்டணப் பேரணியும், மாலை 5 மணிக்கு அமெரிக்கத் தூதரகத்தின் முன் கண்டன ஆர்ப்பாட்டமும் நடைபெறும்.